**அரியலூரில் 1150 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 64 இலட்சம் மதிப்பில் திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவினையும் மற்றும் 33 பயனாளிகளுக்கு ரூ.14 இலட்சம் மதிப்பில் பெட்ரோல் ஸ்கூட்டர்களையும் ஆகமொத்தம் 1474 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 90 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் வழங்கினார்கள்.**

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட சமூக நலம் மற்றும் சத்துணவுத்திட்டத்துறை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை, கூட்டுறவுத்துறை ஆகிய துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் தலைமையில் இன்று (17.02.2018) நடைபெற்றது.

இவ்விழாவில், சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினர் **திரு.மா.சந்திரகாசி** அவர்கள், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.இராமஜெயலிங்கம்** அவர்கள் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

இவ்விழாவில், சமூக நலத்துறை சார்பில் 1150 பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் திருமண நிதியுதவி ரூ.6 கோடியே 64 இலட்சத்து 41 ஆயிரத்து 150 மதிப்பிலும், கூட்டுறவுத்துறை சார்பில் 288 மகளிர் சுயஉதவிக்குழுக்களுக்கு ரூ.11 இலட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான கடனு உதவிகளும், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு தலா ரூ.4245/- மதிப்பில் பித்தளை சலவைப்பெட்டிகளும், ஒருவருக்கு ரூ.5250/- மதிப்பில் விலையில்லா தையல் இயந்திரமும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 33 பேருக்கு இணைப்பு சக்கரங்கள் பொறுத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர் மற்றும் செயற்கை அவயங்கள் ரூ.14 இலட்சத்து 39 ஆயிரத்து 564 மதிப்பிலும் ஆகமொத்தம் **1474** பயனாளிகளுக்கு **ரூ.6 கோடியே 90 இலட்சத்து 44 ஆயிரத்து 454** மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கி மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசியதாவது :-

அரியலூர் மாவட்டத்தில் கடந்த ஐந்து ஆண்டுகளில் மாவட்ட சமூக நலத்துறையின் சார்பில் தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின்கீழ் 10 ஆயிரத்து 775 பயனாளிகளுக்கு திருமண நிதியுதவியாக ரூ.36 கோடியே 42 இலட்சத்து 25 ஆயிரமும், ரூ.13 கோடியே 47 இலட்சத்து 95 ஆயிரத்து 250 மதிப்பில் 10 ஆயிரத்து 775 கிலோ கிராம் தங்க நாணயமும், என ஆகமொத்தம் ரூ.49 கோடியே 90 இலட்சத்து 20 ஆயிரத்து 250 மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நடப்பாண்டிற்கு பாரத ரத்னா புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் நூற்றாண்டு விழா அரியலூரில் நடைபெற்ற பொழுது, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 100 பயனாளிகளுக்கு தாலிக்குத் தங்கம் வழங்கும் திட்டத்தின் மூலம் ரூ.40 இலட்சம் திருமண நிதியுதவியும், தலா 8 கிராம் வீதம் 800 கிராம் தங்க நாணயம் ரூ.24 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பில், என ஆகமொத்தம் ரூ.64 இலட்சத்து 37 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்கள்.

இன்று சமூக நலத்துறையின் சார்பில் 10-ம் வகுப்பு படித்த 636 ஏழைப் பெண்களுக்கு தலா ரூ.25,000/-மும் மற்றும் 8 கிராம் தங்க நாணயமும், பட்ட படிப்பு படித்த 514 ஏழை பெண்களுக்கு தலா ரூ.50,000/-மும் மற்றும் 8 கிராம் தங்க நாணயம் என ஆகமொத்தம் **1150** பயனாளிகளுக்கு திருமண நிதியுதவியாக ரூ.4 கோடியே 16 இலட்சமும், திருமாங்கல்யத்திற்கு தங்க நாணயம் ரூ.2 கோடியே 48 இலட்சத்து 41 ஆயிரத்து 150 என ஆகமொத்தம் 6 கோடியே 64 இலட்சத்து 41 ஆயிரத்து 150 மதிப்பிலான நலத்திட்டங்கள் வழங்குவதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் ரூ.58 ஆயிரத்து 840 மதிப்பிலான இணைப்பு மூன்று சக்கரங்கள் பொருத்தப்பட்ட ஸ்கூட்டர் 22 பயனாளிகளுக்கும், 11 மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு விதமான நலத்திட்ட உதவிகளும் என ஆக மொத்தம் ரூ.14 இலட்சத்து 39 ஆயிரத்து 564 மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகின்றன.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறையின் சார்பில் 1 பயனாளிகளுக்கு இலவச தையல் இயந்திரமும் மற்றும் 2 பயனாளிகளுக்கு சலவைப்பெட்டிகளும் என ரூ.13 ஆயிரத்து 740 மதிப்பிலான நலத்திட்டங்களும், மாவட்ட கூட்டுறவுத்துறையின் சார்பில் 288 மகளிர் சுய

உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் ரூ.11 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் வழங்கப்படுகிறது.

எனவே, இந்நலத்திட்ட உதவிகள் பெற்ற பயனாளிகள் தமிழக அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும். இத்திட்டங்கள் போன்று பல முத்தான திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறார் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் எடப்பாடியார் அவர்கள்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் விட்டு சென்ற பணிகளை சிறப்பாக நிறைவேற்றி வரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் தலைமையிலான அரசுக்கு என்றென்றும் உறுதுணையாக இருக்க வேண்டும் என மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் பேசினார்கள்.

**இவ்விழாவில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பேசியதாவது :-**

அரியலூர் மாவட்டத்தில் ஏழைப்பெண்களின் திருமண உதவிக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழ்நாடு முதலமைச்சராக திருமாங்கல்யத்திற்கு தங்கம் மற்றும் நிதியுதவி வழங்கும் திட்டத்தை செயல்படுத்தினார்கள்.

ஏழைப்பெண்களுடைய வாழ்வில் ஒளிவிளக்கேற்றும் வகையில் தமிழக அரசின் சார்பில் சிறப்பான இத்திட்டத்தின்கீழ் இன்றைய தினம் அரியலூர் மாவட்டத்தில் 1150 பயனாளிகளுக்கு ரூ.4 கோடியே 16 இலட்சம் மதிப்பில் திருமண நிதியுதவியும், திருமாங்கல்யத்திற்கு தங்கம் 8 கிராம் வீதம் ரூ.2 கோடியே 48 இலட்சத்து 41 ஆயிரத்து 150 மதிப்பிலும் ஆகமொத்தம் ரூ.6 கோடியே 64 இலட்சம் மதிப்பில் இன்று வழங்கப்படுகிறது.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் 33 பயனாளிகளுக்கு ரூ.14 இலட்சத்து 39 ஆயிரம் மதிப்பில் உதவி உபகரணங்கள் வழங்கப்படுகிறது.

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை சார்பில் 3 பயனாளிகளுக்கு ரூ.13 ஆயிரத்து 740 மதிப்பில் இலவச தையல் இயந்திரம், சலவைப்பெட்டிகள் வழங்கப்படுகிறது.

மாவட்ட கூட்டுறவுத்துறையின் சார்பில் 288 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு வங்கி கடன் ரூ.11 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் இன்று வழங்கப்படுகிறது.

திருமண உதவிக்காக தாலிக்குத் தங்கம், விலையில்லா வெள்ளாடுகள், கறவைப்பசுக்கள், மகளிர் சுயஉதவிக்குழுவின் மூலம் பல்வேறு கடனுதவிகள், மாற்றுத்திறனாளிகளின் நலன் காக்க ஏராளமான நலத்திட்டங்கள் என அனைத்து தரப்பினரும் பயன்பெறுகிற வகையில் தமிழக அரசு சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

இன்று சமூக நலன் மற்றும் சத்துணவு திட்டத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை கூட்டுறவுத்துறை போன்ற துறைகளின் மூலம் 1474 பயனாளிகளுக்கு ரூ.6 கோடியே 90 லட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகள் வழங்கப்படுகிற இவ்விழாவிற்காக சிறப்பாக பணியாற்றிய அனைவருக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் அரசின் திட்டங்களை அறிந்துகொண்டு, பயன்பெறுமாறு கேட்டுக்கொள்கிறேன் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.க.லட்சுமி பிரியா, இ.ஆ.ப.,** அவர்கள் பேசினார்கள்.

இவ்விழாவில், மாவட்ட வருவாய் அலுவலர் சே.தனசேகரன், அரியலூர் கோட்டாட்சியர் மு.மோகனராஜன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ஜெ.சுரேஷ்குமார், துணை ஆட்சியர் (சமூகபாதுகாப்புத்திட்டம்) ஜெ.பாலாஜி, துணைப்பதிவாளர் (பொதுவிநியோகத்திட்டம்) கே.கே.செல்வராஜ், வட்டாட்சியர் சு.முத்துலெட்சுமி (அரியலூர்), செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் ரெ.மதியழகன் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

முன்னதாக மாவட்ட சமூக நல அலுவலர் ப.பூங்குழலி அனைவரையும் வரவேற்றார். முடிவில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ஆர்.பாலாஜி நன்றி கூறினார்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.